விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

மலர் 7 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 100) 1970 பெப்ரவரி | இதழ் 5



**அறிவிப்பு**

காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு

காந்தி நிலையம்

உருத்திரபுரம்


# கதர் ராஜனின் ஆசி



எனது இலங்கைச் சுற்றுப் பிரயாணத்தின் போது பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடந்த கூட்டங்கள், பிரமுகர்கள் சந்திப்புகள், பத்திரிகை நிருபர்கள் பேட்டிகள், இதர நிகழ்ச்சிகள் பலவற்றிலும் எனக்கு ஏற்பட்ட அநுபவ உணர்வை, 'காந்தீயம்' பத்திரிகை வாசகர்களுக்கும் மற்றவர்களுக்குமாக சுருக்கிக் கூறுமாறு பணிக்கப் பட்டுள்ளேன்.

உண்ண உண்ணத்தெவிட்டாத இன்ன முதாயமைந்து, என் உள்ளம் முழுதும் கொள்ளைகொண்ட காட்சிகள், நிகழ்ச்சிகள், தொடர்புகள் இவை பற்றி எங்ஙனம் சுருக்கமாகத் தருவது என்பதே எனது முதல் திகைப்பாகும். இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த நேரங்கூட, ஒரு அன்பரைக் காண்பதில் ஏற்பட்ட சுணக்கத்தால் கிடைத்த இடை வெளியேயாகும்.

இவ்வண்ணம், ஓயாது பலபொது நலசேவையில் ஈடுபட்டுள்ள நண்பர்கள், குழுக்கள், நிறுவனங்கள் பணிகள் இவற்றுடன் தொடர்பு கொண்டு பங்கு பற்றி இன்பமெய்தும் வாய்ப்பினை நல்கிய அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தினருக்கு எனது நன்றியை எவ்வாறு முழுதுமாகத் தெரிவித்துக் கொள்வதெனும் திகைப்பினுக்கு ஊடே ஒரு உவமானத்துடன் என் உணர்வை விளக்கமுற்படுகிறேன்.

பார்வையை இழந்து மீண்டும் காணும் திறன் பெறும் ஒருவனின் முதல் காட்சி, பரந்ததடாகம் ஒன்றில் மலிந்து பொலிந்த பல வண்ண, பல தரமிக்க பூக்களையும் இலைகளையும் தாங்கி நிற்கும் ஒரு சோலையை ஒக்குமெனின், அவனுடையும் இதஉணர்வை ஊகித்துக்காணுங்கள்! பல சாதி மத வேறுபாடுகள், பொருளாதார ஏற்றத் தாழ்கவுளுக்கிடையேயும் கூட இன்முக புன்னகையும் பூண்டு தமிழரும் சிங்களவரும் இஸ்லாமியரும் எத்திறத்தவராயினும் ஒருங்கே கலந்து செயல் பட்ட காட்சிகள் பல.

வாத்துவையில் கிராமநலப் பணிபுரியும் இலங்கை கிராமப் புருத்தாரண இயக்கத் தாரென்ன, இலங்கைமுழுதும் பரந்துள்ள கல்வி நிலையங்கள் சேவா நிறுவனங்கள், படித்தோர் கூட்டம் பாமரர் கூட்டம் என்ற பாகு பாடின்றிச் சேவையிலும் சிரமதானத்திலும் பங்கு பெறும் ஆவலர்களென்ன, உபசரிப்பில் சளையா உத்தமர்களைக் கொண்ட இராம கிருஷ்ண மிஷன் போன்ற நிலையங்களும், அகாலங்களில் கூட்டம் முடித்து வரும் எம்மையும் அயர்வின்றி ஆதரித்த தாயிற் பரிவு மிக்க தயாபரர்களான அன்பர் பலரது தொடர்புகளையும் விடாது தொகுத்து விளக்குவதென்பது ஒரு கடும் சோதனையாகும். இச் சோதனையிலே தேறமுடியாது தவிக்கும் நான் இத்தகைய பேரன்புக்கும் பேருபசரிப்புக் கலந்த ஆதரவுக்கும் தக்க பாத்திரமாகநின்று என்றென்றும் உழைத்து நிற்பதில் உவகையெய்தும் பாக்கியத்தை இறையெனக் களித்து நிலை பெறச் செய்ய பிரார்த்தித்து முடித்துக் கொள்ள விழைகிறேன்.

அன்பன் காதிராஜன்.


**இளைஞர்களே !**

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?

★ கமம்

★ நெசவு

★ தும்பு

★ அச்சு

★ தையல்

★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்

உருத்திரபுரம் (தபால்)

அல்லது

சர்வோதய நிகேதனம்

இந்துக் கல்லூரிச் சதுக்கம்,

இரத்மலானை.

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 100
1970 பெப்ரவரி

# சொத்துரிமையும் ஒத்துரிமையும்

''காணி நிலம் வேண்டும் பராசக்தி'' என்று பாரதியார் பாடினார். பாரதியாருக்குத் தனிச்சொத்தில் பற்றிருந்தது. உண்மையான சமதர்மத்தில் தனிச் சொத்து என்ற பேச்சிற்கே இடமில்லை என்பர் சமதர்மவாதிகள். மேலும் தனிச் சொத்துரிமை ஒன்றினால் தான் மனிதன் அரும்பாடுபட்டு உழைப்பான் என்றால் மனிதன் அன்பு மார்க்கத்தில் முன்னேறவில்லை யென்பது தான் பொருள்என்று அறம் உணர்ந்தோர் கூறுவர்,

ஆயின் பாரதியாரே ''பாரதசமுதாயம் முப்பது கோடி சனங்களின் சங்க முழுமைக்கும் பொது உடைமை'' என்றும்பாடுகிறார். பாரதியார் எதைப் போற்றினார்? பாரதியார் தனி உடைமையையு ம்போற்றினார் பொதுஉடைமையையும் போற்றினார்.

நாம் இப்பொழுது ஆராய வேண்டிய பிரச்சனை சொத்துடைமை மனிதனுக்கு வேண்டிய அடிப்படை உரிமைகளுள் ஒன்று என்பதாகும்.

முதலில் நாம் கவனிக்க வேண்டியது மனிதன் சமூகத்தில் கொண்டுள்ள இடம். மனிதன் தனியே மனிதப் பண்புடன் வாழமுடியாது, சமூகந் தான் மனித விலங்கினை மனிதனாக்குகின்றது. சமூகம் இல்லாத விடத்து மனிதன் என ஒன்று இருக்க முடியாது. மனிதன் உண்மையில் ஒரு சமூக விலங்கே. மனிதனுக்குரிய பண்பு, நாகரிகம் அறம் எல்லாம் சமூகம் சார்பாகச் சமூகத்திலிருந்து எழுவன. எனவே மனிதன் தனக்குரிய எல்லாப் பயன்கள் பெறுமானங்களையும் சமூகத்திலிருந்து பெறுகிறான் என்பதை நாம் மறக்கமுடியாது.

இவ்வுண்மையிலிருந்து பெறப்படுவது என்னவெனில் மனிதன் தன் ஆக்கத்திற்குச் சமூகத்திற்குக் கடமைப்பட்டவன் என்பதே. எனவே அவன் சமூகத்திற்கில்லாத ஒருதனிஉரிமையை என்றும் பெறமுடியாது.

ஆதார உரிமை, அடிப்படை உரிமை என்றெல்லாம் அடிக்கடி அரசியல் அமைப்புக்களில்பேசிக்கொள்கிறார்கள். சொத்துடைமையும் அடிப்படை ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. வெறும் பொருளுக்கு ஒரு மதிப்புக் கொடுப்பது சமூகம். அந்த மதிப்பினால் வெறும் பொருளுக்கு ஒரு பயன் உண்டாகி அது சொத்தாகின்றது. எனவே சமூகத்தினால்தான் மனிதன் மனிதனாகின்றான் என்பதும் சொத்து உண்டாகின்றது என்பதும் தெளிவு.

மனிதனின் ஆதார தேவைகளுக்கு அடிப்படையாயமைந்த பொருள்கள் பல அத்தியாவசிமானவை. உண்டி, உடை, உறையுள் இவையவசியம். உயிர் வாழ்வுக்கு இவை வேண்டும். ஆயின் உயிர்வாழ்விற்குமட்டுமல்லாது சிலரின் மேலதிக நுகர்ச்சிக்கு இவை பயன்படும் போது அவை அடிப்படை உரிமையின் பாற்படா. சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஒத்த அளவில் தம்மடிப்படைத் தேவைகளைப் பெற்ற பின் எந்தத்தனி மனிதனுக்கும் தனிப்பட்ட சொத்துரிமை உண்டு அதற்கு முன் தனி அடிப்படை உரிமை உண்டெனநாம் எப்படி விவாதிக்கலாம்.

சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய ஆதார தேவைகளை அவசிய அளவிற்குப் பெற்ற பின்னரே எந்தத் தனிமனிதனுக்கும் சொத்துரிமை உண்டாகும் என நாம் கொள்ளலாம். அவ்வளவுகாலமும் 'ஒத்துரிமை' என்பதே மனிதனின் ஒழுக்க நியதியாக இருக்க வேண்டும்.

உலக சமுதாயம் இந்தஅடிப்படை அளவில் தன்னிறைவு பெற்றபின், ஒவ்வொருவரும் தம்தம் இயல்பிற்கும் சுபாவத்திற்கும் ஏற்ற அளவில் சொத்துரிமையைப் பேணி வளர்க்கலாம்.

இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே பாரதியார் ஓரிடத்தில் பொது உடைமையைப் போற்றினார் ஓரிடத்தில் காணிநிலம் வேண்டுமென்றார். தனி ஒருவனுக்கு உணவில்லையென்னும் நிலை இருக்கும் வரை பொது உடைமை வேண்டும். அந்நிலை ஒழிந்த பின் தான் காணி நிலம் தனிப்பட்ட வருக்கு வேண்டும்.

உலகத்திலுள்ள பலமக்களின் வறுமை நிலை, ஏழைமை, துயர், துன்பம் இவற்றை எண்ணும் போது ஒரு சிலர் சொத்துரிமையை அடிப்படை உரிமையென்று கொள்ளல் அநாகரிகம்.

—இ. இரத்தினம்.

## வரவு செலவு

வரவு—செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1970 பெப்பிரவரி மாதம், வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 139 | 80 |
| சர்வோதயபாத்திரம் | 11 | 96 |
| சம்பத்துத்தானம் | 25 | 50 |
| விடுதிக்கட்டணம் | 73 | 70 |
| காந்தீயம் | 10 | 00 |
| புத்தகவிற்பனை | 12 | 00 |
| மொத்தம் | 272— | 96 |

| செலவு | | |
|---|---|---|
| உணவு | 74 | 48 |
| பிரயாணம் | 66 | 85 |
| தபால் | 9 | 70 |
| சலவை | 5 | 37 |
| சலூன் | 1 | 60 |
| மாணவர் செலவு | 9 | 17 |
| வெளிச்சம் | 2 | 80 |
| அச்சகம் | 31 | 35 |
| கைச்செலவு-சம்பளம் | 5 | 00 |
| காந்தீயம் | 14 | 50 |
| நானுவிதம் | 6 | 00 |
| அச்சுக் கட்டணம் | 5 | 00 |
| சிரமதானம் | 13 | 15 |
| வயித்தியம் | 6 | 55 |
| கமம் | 3 | 00 |
| கோகுலம் | 2 | 81 |
| மொத்தம் | 256 | 33 |

வினோபாஜியின்
சர்வோதயத்திட்டம்

1. பூதானம்
2. கிராமதானம்
3. சிரமதானம்
4. சம்பத்தானம்
5. சமயதானம்
6. சாந்திசேனை
7. சர்வோதய பாத்திரம்
8. இலக்கியபிரசாரம்

# சர்வோதயம் பரவட்டும்

வளம்பொருந்தியது நமது நாடு பசுமை நிறைந்தது நமது நிலம். பண்பாட்டால் உயர்ந்து, வளம் பெற்று வாழ்ந்தவர்கள் நம் மக்கள். நாம் தமிழர், நாம் சிங்களவர் என இனப்பாகுபடுத்தும் நாம் ஒரு காலத்தில் ஓரினமாக ஒற்றுமையாக வாழ்ந்தோம் என்பது இன்று சரித்திர நிகழ்ச்சியாகக் கடந்து விட்டது.

அந்நியர்களின் ஆட்சி எங்களை அடிமைப் படுத்தியது. அடிமைத்தளை நம்மக்களின் பண்பாட்டைப் பாழ்படுத்தியது. அன்னியரின் பிரித்தாளும் திறனால் நாம் இனங்களாகப் பிரிக்கப்பட்டோம். அவர்கள் கலாச்சாரங்களினால் நம் கலாச்சாரங்கள் கலைக்கப்பட்டன. பதவிப்பெருமையைப் பெரிதாகப் போற்றும் அவர்கள் வகுத்த அரசியல் வலையில் நம் தலைவர்கள் வீழ்ந்தார்கள். போட்டி, பொறாமை, பதவிப் போராட்டங்கள் ஏற்பட்டனவேயொழிய அடிமை மனப்பான்மை அகலவில்லை.

மனத்தின் அடித்தளத்தில் பதிந்து விட்ட இந்த அடிமை மனப்பான்மையின் பாதிப்பு இன்றைய நமது சமுதாயத்தின் பிரதிபலிப்பாகும். கடந்தகால இனக்கலவரங்கள்- பொருளாதார ஏறத்தாழ்வு - வேலையில்லாப் பிரச்சனை அத்தனையும் அடிமை மனப்பான்மையின் விளைவுகள்.

அன்று நம் வயல்கள் பசுமை நிறைந்து காணப்பட்டன, முற்றித் தெறித்த கதிர்கள், மூட்டைகளில்நெற் சுமைகள். உண்டுகழிப்புற்று;கொடுத்து -வாங்கிவளம்பெற்று வாழ்ந்துவந்தான் நம் கமக்காரன். இதன் அடிப்படையிலே தோன்றியதுதான் நமது சிராமிய-விவசாயப் பண்பாடு.

அன்னியரின் ஆதிக்கத்தால் இப்பண்பாடும் சீர்குலைந்தது உணவுப் பயிர்கள் மாறி, பணப் பயிர்கள் நம் வயல்களில் வளர்ந்தன. தேயிலை- கோப்பி-றப்பர் போன்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கு இலங்கைவிளைநிலமாகியது.

இதன் விளைவு-இன்று உலகச் சந்தையில் இலங்கை ஏட்டிக்குப் போட்டி வியாபாரம் தேயிலை விலை இறங்கியது நம் வியாபாரம் வீழ்ச்சியடைந்தது.

பொருளாதாரம்- பண்பாடு இப்படியாக அந்நியமணம் நம்கல்வி, கலாச்சாரங்களிலும் சிலியது. நம் கல்வித்திட்டம் அவர்களிடம்மிருந்து காப்பியடிக்கப்பட்ட திட்டமேயாகும்' இதன்விளைவாக இன்றைய இளைஞர்கள் வேலையில்லாது திண்டாடுகின்றார்கள் ஒழுங்கற்ற -ஒழுக்கமற்ற கல்வியால் அவர்கள் வாழ்கை பயனற்று பண்பாடின்றி மாறியது.

இந் நிலைமாற வேண்டும். அடிமைப்பட்ட நம் மக்கள் தம் மனத்தளவில் சுதந்திரம் பெற வேண்டும் நமதுசூழலைக் கொண்டு சுயமாகச் சிந்திக்கவும் செயல் படவும் வேண்டும்.

நாம் நாமாக — தனித்தன்மை கொண்டவர்களாக, சுயமாகத் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.

இன்று இழப்பினும் இறுதி வெற்றி நமதே- நமது சொந்தத்திட்டங்களுக்கே எனஎண்ணித் தெளிதல் வேண்டும். நம் சமூகத்தின் இன்றைய பிரச்சினை தமிழர், சிங்களவர் என்ற இனப்பிரச்சனை அல்லது மொழிப்பிரச்சனையல்ல இது மனிதப் பிரச்சனை- மனிதாபிமானப் பிரச்சனை. அடிமைப்பட்ட சமுதாயமல்ல மனிதனை மாற்றுவது; மனிதன்தான் சமுதாயத்தை மாற்றல் வேண்டும்.

சர்வோதயம் தனி ஒரு மனிதனில் நம்பிக்கை கொண்டது. தனிஒரு மனிதனின் மனமாற்றத்தில் நம்பிக்கை கொண்டது. தனிமனிதன் மாறுவதால் சமுதாயம் மாறுபடும் என நம்புகின்றது. சிந்தனைப் புரட்சியையும், செயல்திறனையும் வலியுறுத்துகின்றது.

சமத்துவ அடிப்படையில் நமது பொருளாதார வாழ்வு அமையவேண்டும். உழவிலும், தொழிலிலும் இணைப்பும், சம நிலையும் இருத்தல் வேண்டும். பரவல் முறைப் பொருளாதாரத்தின் அடிப்படையில் நம் கிராமங்கள் புது வாழ்வும், புதிய ஆற்றலும் பெற வேண்டும். நம் மக்கள் உள்ளத்தால் உயர்ந்து, அன்பும் அறமும் கொண்ட வாழ்வு வாழ வேண்டும். சர்வோதயத்தின் இலட்சியம் இதுவே இதைப் பரப்ப இன்று இளைஞர்படை அணி வகுத்து நிற்கட்டும். நம் உறங்கிய உள்ளங்களில் ஒரு விழிப்பு; வரண்ட கற்பனையில் ஒரு புதுமை;சென்று வந்த பாதையில் ஒரு திருப்பம். பரவட்டும் சர்வோதய இயக்கம்.

சி. யோ. சந்தியாப்பிள்ளை

# இலங்கையில் கதர்ராஜன்

காந்தி நூற்றாண்டு விழாவை யொட்டி மதுரை அகிம்சைப் பள்ளி கௌரவ இயக்குநரும் காந்தி நூற்றாண்டு விழாதேசியக்குழுவின் -மக்கள் தொடர்புப் பிரிவின் அமைப்பாளருமான திரு. ஏ. என். இராஜன் அவர்களை இலங்கைக்கு வருமாறு காந்தி சேவா சங்கம் அழைத்தது. இதனை ஏற்றுக்கொண்ட திரு. ஏ. என். இராஜன் 2. 2. 70 இல் தலைமன்னார் மூலம் இங்கு வருகை தந்து 15நாட்கள் சுற்றுப் பிரயாணச் செய்து காந்திய-சர்வோதய கருத்துக்களைப் பரப்பியதுடன் தம்முடன் கொண்டு வந்த ஒரு கதிர் அம்பர் ராட்டையையும் செயற்படுத்திக் காட்டினர்.

வவுனியா, உருத்திரபுரம், அக்கராயன்குளம், கிளிநொச்சி, நீர்வேலி, அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்(கச்சேரி) நல்லூர், வட்டுக்கோட்டை, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், கொழும்பு, இரத்மலானை, வாத்துவ ஆகிய இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட திரு. ஏ. என் இராஜன் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு காந்தியடிகளின் தத்துவங்களை விளக்கி கூறி மக்கள் மத்தியில் சர்வோதய தத்துவம் பற்றிய புத்துணர்வை ஏற்படுத்தினர். இவரது வருகையால் இலங்கையில் கதர் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# செய்தி

காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஒரு கதிர் அம்பர் ராட்டை இலங்கை காந்தி நூற்றாண்டு விழா தேசிய குழுவினருக்கு செயற்படுத்திக் காண்பிக் கப்பட்டது. இதனைப் பார்த்த குழுவினர் பெரு மகிழ்ச்சி அடைந்து அம்பர் ராட்டையை இலங்கை முழுதும் பரப்ப வேண்டுமென்பதை வரவேற்றனர்' இதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு தேசியக்குழு காந்தி சேவா சங்கத்தைக் கோரியுள்ளது.

# தானம் தன்னைக்காப்பதற்கே

—வினோபாஜீ

இல்லிற் செல்வமும் நவாயில்
தண்ணீரும் ஏறிடில் இறைத்திடு இரு
கைகளாலும்—கபீர்

**வினு:-** சமுதாயத்தின் அபிவிருத்திக்கு பொருளாதார மகிழ்ச்சியுடன் தேவையான இதர மலர்ச்சிகள் யாவை?

**விடை :-** பொருளாதார மலர்ச்சி அமெரிக்காவில் போதிய அளவு ஏற்பட்டுள்ளது. ஆனுல் அங்கு நடைபெறுகின்ற கொலையைப் போன்று வேறு எங்கும் நடைபெறவில்லை. அமெரிக்காவில் பைத்தியம் பரவியுள்ள அளவு வேறு நாடுகளில் இல்லை. அவர்களுக்கு நான் 'மேனியா' என பெயரிட்டுள்ளேன். வெவ்வேறு விதமான மேனியாக்களிருக்கின்றன. அதற்கு ஒரு சாத்திரமே படைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஒவ்வொருவரிடமும் ஒரு கைத்துப்பாக்கி இருக்கிறது. மகனுக்கு கோபம் வந்தால் தந்தையை சுட்டு விடுகிறுன். அங்கு சிறிய சிறிய விஷயங்கட்கும் கோபம் வந்து விடுகிறது, கையில் துப்பாக்கியிருப்பதால் சுட்டே விடுகிறுர்கள். கோபமுள்ள இடத்தில் ஆயுதம் இருக்கக்கூடாது. கோபமுள்ளவர்கள் ஆயுதம் வைத்திருக்க உரிமையில்லாதவர்களாவார்கள்.

பொருளாதார வளர்ச்சியால் மட்டும் சமநிலையடைய முடியாது ,பொருளாதார மறுமலர்ச்சி' பிறருக்கு நன்மை என்ற கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒரே இடத்தில் பணம் குவியுமாறு பொருளாதார மலர்ச்சி இருக்கக்கூடாது. காய் கறியில் தேவையான அளவு உப்புச் சேர்த்தால் சுவையாக இருக்கிறது. முற்றிலும் உப்புபோடவில்லையெனில் சப்பென்று இருக்கிறது; அதிகம் போட்டால் உப்பு கரிக்கிறது. அதாவது உப்பின் அளவு கூடவோ குறைவாகவோ இருக்கக் கூடாது. அளவாக இருக்கவேண்டும். இதைப் போன்றே செல்வம் மிகுதியாகவோ, குறைவாகவோ இல்லாமல் அளவாக இருந்தால்தான் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒரு பகுதியில் பணம் குவியும் போது மற்ருெரு பகுதிக்கு துன்பம் மிகுகிறது. கபீர் இது குறித்து ஒரு 'கவிதை' இயற்றியுள்ளார். 'இல்லிற் செல்வமும் நாவாயில் தண்ணீரும் ஏறிடில் இறைத்திடு இருகைகளாலும்' என்பதே அக்'கவிதை' ஓடத்தில் தண்ணீர் ஏறினுல் ஒரு கையால் அல்ல இரண்டு கைகளாலும் தண்ணீரை இறைக்க வேண்டும். இல்லையெனில் படகிற்கு ஆபத்து. அது மூழ்கிவிடும். இதைப்போன்றே வீட்டில் செல்வம் பெருகி விட்டால் இரண்டு கைகளாலும் தானம் செய்ய வேண்டும். வீட்டில் செல்வம் பெருகுவதும், ஓடத்தில் தண்ணீர் பெருகுவதைப் போன்று ஆபத்தானதாகும். இவ்வாறு தண்ணீரை இறைப்பதும், செல்வத்தைத் தானம் செய்வதும் தயையோ, தர்மமோ அல்ல. தற்காப்பிற்கு மிக மிக அவசியமாகும்.

கபீரின் எடுதுக்காட்டு உத்தமமானதும், விளக்கமானதுமாகும் ஓடம் செல்லுவதற்கு தண்ணீர் அவசியம். இதைப்போன்றே சமுதாயத்திற்கு பொருள் தேவை. பொருளின்றி சமுதாயம் இயங்காது. ஆனுல் பொருள் வீட்டிற்குள் அல்ல ஓடத்திற்கு வெளியே தண்ணீர் இருப்பதைப் போன்று இருக்க வேண்டும். ஆனுல் வீட்டில் பொருள் இருக்கக் கூடாது. இதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

இத்தகைய நடைமுறைக்கு வரும் போது சமுதாயத்தில் மகிழ்ச்சி இருக்கும். உண்ண உணவு கிடைக்காத இடத்தில் அநேக பாப காரியங்கள் நடைபெறுகின்றன.

ஆதாரம்:- பூதான் யக்ஞ

**வாசித்துவிட்டீர்களா**

**பனையும் பயனும் ரூ. 2**

**இனிக்கும் பத ர் ரூ. 2**

விபரங்களுக்கு-
காந்தி நிலையம்.
உருத்திரபுரம்

## சம்பத்துத் தானம்

சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவசள்—

| | ரூ | ச |
|---|---|---|
| திரு. ஐ இராமநாதன் 36 பௌன்டின்ஹவுஸ்லேன் கொழும்பு. 10 | 30 | 00 |
| திரு- நா. பாலச்சந்திரன் கொள்ளுப்பிட்டி. | 2 | 00 |
| திரு. க. இராசையா விவேகானந்த வீதி வெள்ளவத்தை | 2 | 00 |
| திரு. எஸ். சுந்தரலிங்கம் கொள்ளுப்பிட்டி திருமதி சாம்பசிவம் 11′ பிருங்போட் பிளேஸ் பம்பலப்பிட்டி | 4 | 00 |
| திரு. செ. குமாரசாமி செனெற்சபை கொழும்பு | 5 | 00 |
| திரு. கே. பேரம்பலம் விவேகானந்த வீதி கொழும்பு-6 | 2 | 00 |
| திரு. சு. வேலுப்பிள்ளை காலிவீதி, கொழும்பு | 2 | 40 |
| திரு. வி. இராசசேகரம் பிரதிநிதிகள் சபை கொழும்பு | 10 | 00 |
| திரு. எஸ். இராமலிங்கம் பொலிஸ் நிலையம் கம்பளை | 20 | 00 |
| திரு. இ. இரத்தினம் காலி வீதி பம்பவப்பிட்டி. | 20 | 00 |
| திரு. செ. இராஜேந்திரன் இந்தியஸ்டேட் வங்கி, கொழும்பு. | 5 | 00 |
| திரு. சனகரத்தினம் காணி அபிவிருத்திப் பகுதி கொழும்பு. | 2 | 00 |
| திரு. செல்வரத்தின்ம் தெகிவளை. | 10 | 00 |
| ஓர் அன்பர் | 20 | 00 |

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் ரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய **அச்சக உபகரணங்களின்** உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சக லிமிட்டெட்டில் **அச்சிடப்** பட்டத'.